# என் உயிர்க்காக்கும் பலஸ்தீன்

**கலைப் பிறை வஹாப்தீன்**

அமெரிக்க நோயாளியின்
துப்பலில் விளைந்த
புதிய காளான்கள் நீங்கள்.
முதிரை மரத்தில்
முகவரி எழுதிப் போனால்,
எங்களுக்குப் பயமில்லை.

ஆயுதக் கண்டு பிடிப்பால்
உலகத்தின் வாய்(ப்) பிழந்துபோக,
நீ சிம்மாசனம் ஏறியதால்
வியப்பில் விழுந்து குளிக்க
எங்களுக்கு நேரமில்லை.

கற்களின் வேகத்தில்
உங்களின் அதிசயக்கண்டு பிடிப்புக்கள்
முட்டைகளாகிப் போகுமென்பதை
முட்டாள்களாகிப் போனதால்,
உங்களுக்குப் புரியவில்லை.

அல்லாஹ்வுக்காக,
என்னை இழக்கிறேன்
எனது புனித பூமியின் முகத்தில்
உனது கால்களால் உதைப்பதை
பொறுக்காமல்...!!

நீ புரியமாட்டாய்,
ஷஹீதாகிப்போகவே

நான் விரும்புவதால்,
நீ மிதித்துப்போகும் சுவடுகளை
இரத்தத்தால் நானும் கழுவிப்போனேன்.

உலகத்தின் மூலையெல்லாம்
துஆக்களின் கூர்முனையால்
உன் நெஞ்சு பிழக்கும்.
கண்ணீர்த்துளிகளால் நீ
கரைந்தும் போவாய்.

என்னை அழித்ததாய் நீ
நினைத்துப் போனால்,
தோல்வி உனக்கென்பதை
அல்லாஹ் குடியிருக்கும்
என் மனம் சப்தமிடும்.

அல்லாஹ்வுக்காக நான்
பலஸ்தீன மடியில்
என்னை இழந்து ஷஹீதாவேன்
நீ இழந்து போக...

இஸ்ரேலே.....
உனது வேருக்குள்
விஷம் இருக்கிறது
உன்னைப் பிடுங்கும்வரை
என்முதுகு தெரியாது.